**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 30–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 2,4பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி வழக்கறிஞர் மற்றும் 2பிரதிவாதிதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.4ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

அ.வ.எண்.942/2022

வா.சா.1 லல்லி க/பெ பாலசுப்பிரமணியன்

<u>2ம்பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. 2005ம் வருடம் என் தந்தை அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றார். எனது அப்பா இறக்கும்போது வயது 76 ஆகும். 2005ம் ஆண்டு முதல் இறக்கும் தேதி வரை ஓய்வூதியம் பெற்றுக்கொண்டுயிருந்தார். ஆஸ்துமா நோயினால் எனது தந்தை இறந்துவிட்டார். மேற்படி நோயிற்க்கு எனது தந்தை மருத்துவ சிகிச்சை பெற்றாரா அது சம்மந்தமாக மருத்துவ அறிக்கை உள்ளதா என்றால் இல்லை. எனது தந்தை அவ்வப்போது மருத்துவமனை சென்று உடல்பரிசோதனை செய்து வந்தார். உள்நோயாளியாக அவர் அனுமதிக்கும் அளவுக்கு எந்த காரணமும் இல்லை.

2. 17.07.2018 தேதியில் எனது தாயார் இறந்துவிட்டார். எனது தாயருக்கு ஏற்கனவே இருதய அறுவைசிகிச்சை செய்யப்பட்டு இருந்தது. மேலும் அவர் கோயிலுக்கு சென்று திரும்பும் வழியில் மயக்கமாகி கீழே விழுந்து இறந்துவிட்டார்.

2ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.